**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 28.07.2021–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : 28.07.2021 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மான மற்றும் பிரதானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யும் பொருட்டு நகராட்சி மற்றும் நெடுஞ்சாலைத் துறை சாலைகள் வெட்டி பணிகள் மேற்க்கொள்ளப்படுகின்றன. அவ்வாறு வெட்டப்படும் சாலைகளை சிமெண்ட் கான்கிரீட் அமைத்து செப்பனிட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 500000/– (ரூபாய் ஐந்து லட்சம்) மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 500000/– மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
ஆ) பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(2720/21/இ1)

**தீர்மானம் எண். 1050**

அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சியில் அனைத்துப் பிரிவுகளிலும் உள்ள கணினிகள், பிரிண்டர்கள், UPS, நகல் இயந்திரம், இணைய இணைப்புகள் மற்றும் வைரஸ் தடுப்பு செயலிகள், அலுவலகம் மற்றும் அம்மா உணவகத்திலுள்ள கண்காணிப்பு காமரா உபகரணங்கள் ஆகியவைகளை ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட ரூ. 210000/– மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதியும், பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்ற அங்கீகாரமும் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 210000/– மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
ஆ) செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
இ) பணியின் அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதைற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்

(2589/21/இ1)

**தீர்மானம் எண். 1051**

அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் நகர் நல மையம் அமைக்க சுற்றுலா துறை அமைச்சர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களது நேரடி

ஆய்வில், வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் பொது உபயோக இடத்தினை தேர்வு செய்ய அறிவுறுத்தப்பட்டது. வீட்டு வசதி வாரியப் பகுதியில் புதிய நகர் நல மையம் அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

நகர் நல மையம் அமைக்க ரூ. 85.00 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி வழங்க மாவட்ட நல வாழ்வு சங்க நிர்வாக செயலாளர் அவர்களுக்கு பிரேரணை அனுப்ப மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் புதிய நகர் நல மையம் அமைக்க மன்ற அனுமதி வழங்கலாம்.
ஆ) ரூ. 85.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெற பிரேரணை அனுப்ப மன்ற அங்கீகாரம் வழங்கலாம்.

(2695/21/இ1)

**தீர்மானம் எண். 1052**

அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சி, நகரளவை வார்டு–எ, பிளாக்–2, நகரளவை எண். 14/4 அமையும் முழுமைத் திட்ட சாலையினை நீக்கம் செய்ய மனுதாரர் எஸ். சுந்தரி, க/பெ. P.R. சுந்தரம், பச்சுடையாம்பாளையம், இராசிபுரம் மற்றும் ஊர் பொதுமக்கள், இராசிபுரம் உத்தேச புலத்தில் கோரியுள்ளார். இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட இராசிபுரம் திருத்தியமைக்கப்பட்ட முழுமைத்திட்டத்தில் Master Plan (Modified) 80 அடி அகல முழுமைத் திட்ட சாலை உத்தேசிக்கப்பட்டுள்ளது. உத்தேச புலம் முழுமைத் திட்டம் இராசிபுரம் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண். 1–இல் 80 அடி அகலமுள்ள (24.4 மீ.) அகலமுள்ள "AA" சாலை உத்தேசிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் நீக்கம் செய்யக் கோரும் புலத்தில் 45 அடி அகலத்திற்கு உத்தேச சாலையும், அதற்கு வடபுறம் 35 அடி ஒப்புதலுக்குட்பட்ட மனைப்பிரிவு. மனைப்பிரிவு சாலையும் அமைகிறது. மனுதாரர் உத்தேச சாலை இடம் புதுப்பளையம் பிரதான சாலையின் மேற்கில் சுமார் 200 அடி தூரத்திலேயே அமைவதால் நில மதிப்பு அதிகமாக உள்ளதுடன், உத்தேச சாலை விரிவு அபிவிருத்தி திட்டத்தின்படி உள்ளாட்சியால் அமைக்கப்பட வேண்டிய பாதை என்பதாலும், தற்போதைய நகராட்சியின் நிதி நிலைமை திருப்திகரமாக இல்லாததால், உத்தே சாலையினை கையப்படுத்தி நில மதிப்பு வழங்கி சாலை அமைக்க இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே, திட்ட சாலையினை நீக்கம் குறித்து நகர் ஊரமைப்பு துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(3011/21/எப்1)

**தீர்மானம் எண். 1053**

அனுமதிக்கப்பட்டது.

(5) மனுதாரர் (1) திரு எம். துரைசாமி, த/பெ. முத்துகவுண்டர், (2) திரு பி. நடராஜன், பாலக்காடு, அத்தனூர் கிராமம், இராசிபுரம் வட்டம் என்பவர் இராசிபுரம் நகராட்சி, வார்டு–எ, பிளாக்–2, நகரளவை எண். 13/5A, 5B, 6A, 6C மற்றும் 9B–இல் 0.80 ஏக்கர் பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரம் கோரி விண்ணப்பித்துள்ள பிரேரணை நகர் ஊரமைப்புத் துறை, உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. உதவி இயக்குநரால் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களது கடிதம் ந.க.எண். 691/2020/நா.மா. நாள் 5.11.20–இல் பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகளை ஒப்படைக்க தெரிவித்து சாலை அமைப்பு வரைபடத்துடன்

அனுப்பி வைக்கப்பட்டதன் அடிப்படையில் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு அடிப்படை வசதிகளான தார் சாலை வசதிகள், குடிநீர் பகிர்மான குழாய் வசதிகள், சாக்கடை வசதிகள், மின் கம்பம் அமைக்கப்படும், தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது என நகராட்சி பொறியாளரால் 19.2.2021 அன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பொது உபயோகம் பரப்பளவு 200 சதுரடியும், சாலைகள் 13582.07 சதுரடியும் ஆவண எண். 1289/2021 ஆக இராசிபுரம் சப்–ரிஜிஸ்டர் அலுவலகத்தில் தானமாக பத்திரம் பதிவு செய்து ஒப்படைத்துள்ளார். மேற்படி மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பொது உபயோக ஒதுக்கீட்டினை ஏற்பது குறித்து மன்றப்பொருள் வைக்கப்பட்டு மன்ற தீர்மானம் எண். 1003, நாள் 13.05.2021 அன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். 691/2020/நா.மா. நாள் 25.06.2021–இல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவிற்கு ம.வ./ந.ஊ(நா.மா) எண். 60/2021 என எண்ணிட்டு சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளின்பேரில் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண். 691/2020/நா.மா. நாள் 25.06.2021–இல் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்ட நிபந்தனைகளின்பேரில் மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(எப்1/4737/20)

**தீர்மானம் எண். 1054**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி பதிவு எண். TN 28 AS 0104 என்ற வாகனத்திற்கு 7 புதிய டயர், 7 புதிய டியூப், 7 புதிய பிளாட்கள் பொருத்தவும், புதிய பேட்டரி பொருத்துதல், ரேடியேட்டர் சர்வீஸ் மற்றும் நான்கு ஸ்பிரிங் எக்ஸ்டிரா பட்டை அடிக்கும் பணிக்கு கடந்த 23.07.2021 அன்று இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பணியின் விவரம் | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் | ஸ்ரீ ஜோதி முருகன் வாட்டர் ஒர்க்ஸ், சேலம் |
|---|---|---|---|
| 1<br>2<br>3 | 7 புதிய டயர் (7.50 x 16)<br>7 புதிய டியூப்<br>7 பிளாட்கள் | ரூ. 156900/– | ரூ. 160000/– |
| 4 | புதிய பேட்டரி பொருத்துதல், | 14500/– | 15000/– |
| 5 | ரேடியேட்டர் சர்வீஸ் | 14900/– | 15000/– |
| 6 | 4 ஸ்பிரிங் எக்ஸ்டிரா பட்டை அடிக்கும் பணி | 28665/– | 30000/– |
| | | **214965/–** | **220000/–** |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால், M/s. லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(2244/21/எச்1)**

**தீர்மானம் எண். 1055**

அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சி பேருந்து நிலையத்தில் சுத்தம் செய்தல், இருக்கைகள் அமைத்தல், விழிப்புணர்வு வாசகங்கள் மற்றும் ஓவியங்கள் அமைத்து நல்ல முறையில் பராமரிக்க ஏவிஆர் ஸ்வர்ண மஹால் ஜுவெல்லரி (பி) லிட்., நிறுவனத்தினர் முன் வந்து அனுமதி கோரியுள்ளனர். மேற்படி நிறுவனத்தினர், பேருந்து நிலைய அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, தொடர் பராமரிப்பினை மேற்க்கொள்ளவும், நிறுவனத்தின் விளம்பர பதாகைகளை நகராட்சி மற்றும் அரசு விதிகளுக்குட்பட்டு, நிபந்தனைகளின் அடிப்படையில் ஒரு ஆண்டு வைத்துக் கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** பேருந்து நிலைய அடிப்படை வசதிகளை மேம்படுத்தி அழகான முறையில் தொடர்ந்து ஓராண்டிற்கு பராமரிப்பு பணிகளை மேற்க்கொள்ள உறுதிமொழி பெற்று, உரிய நிபந்தனைகளுடன் ஓராண்டு விளம்பரம் செய்து கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**(2990/21/இ1)**

**தீர்மானம் எண். 1056**

அனுமதிக்கப்பட்டது.

(8) இராசிபுரம் நகராட்சி பாரதிதாசன் சாலை நடுநிலைப் பள்ளியில் மூன்று வகுப்பறைகள் கட்டும் ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டுப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தமிழ் முரசு நாளேட்டில் வெளியிடப்பட்டது. அதற்கான விளம்பரக் கட்டணம் ரூ. 4095/– KAL Publication Pvt. Ltd., நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. விளம்பர செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** விளம்பரக் கட்டணம் ரூ. 4095/– நகராட்சி கல்வி நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(1749/19/இ1)**

**தீர்மானம் எண். 1057**

அனுமதிக்கப்பட்டது.

(9) இராசிபுரம் நகராட்சி பாரதிதாசன் சாலை நகராட்சி நடுநிலைப் பள்ளியிலுள்ள பழுதடைந்த ஓட்டுக் கட்டிடத்தை இடிக்கும் ரூ. 40000/– மதிப்பீட்டுப் பணிக்கு 23.7.21 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) அஞ்சனி கன்ஷ்ரக்சன், 68–1, ஓவியம்பாளையம், பரமத்தி – மதிப்பீட்டைவிட 0.06% குறைவு
2) அசோக் கன்ஷ்ரக்சன், 10/243, துறையூர் மெயின் ரோடு,

பொன்னேரி – மதிப்பீட்டைவிட 1.22% அதிகம்.

வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.06% குறைவான M/s. அஞ்சனி கன்ஷ்ரக்சன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மதிப்பீட்டைவிட 0.06% குறைவான M/s. அஞ்சனி கன்ஷ்ரக்சன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(1749/19/இ1)**

**தீர்மானம் எண். 1058**

அனுமதிக்கப்பட்டது.

**( 10 )** இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் (கோவிட்–19) கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்காக கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட தெருக்களில் பொது மக்கள் தாண்டி செல்லாத வகையில் தடுப்பு வேலி (Containment Zone) அமைத்து அப்பகுதியில் துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் பணிபுரிய ஏதுவாக துணி பந்தல் (சாமியானா பந்தல்) போடும் பணிக்காக கடந்த 03.06.2021 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| **வ.எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **கட்டணத் தொகை** |
|---|---|---|
| 1 | சீனிவாசா ஒலி & ஒளி அமைப்பகம், காந்தி சாலை, இராசிபுரம் | ரூ. 165200/– |
| 2 | ஸ்ரீ வெங்கடேஸ்வரா சவுண்ட் சிஸ்டம், தாச தெரு, இராசிபுரம் | 178000/– |
| 3 | ராஜேஸ்வரி ஒலிபெருக்கி நிலையம், தினசரி மார்கெட் லைன், இராசிபுரம் | 174000/– |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால், சீனிவாசா ஒலி & ஒளி அமைப்பகம், இராசிபுரம் என்ற ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை கோவிட் – 19 SDRF நிதியிலிருந்து Sec.15–இல் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(868/20/எச்1)**

**தீர்மானம் எண். 1059**

அனுமதிக்கப்பட்டது.

**( 11 )** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண். 4859/ 2018 அ4 நாள் 19.01.2021–இல் இந்நகராட்சியில் பணிபுரியும் வாகன ஓட்டுநர்களில் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணி முடித்த வாகன ஓட்டுநர்கள் திரு செ. மோகன் மற்றும் திரு ப. சீரங்கன் அவர்களுக்கு தங்கப்பதக்கம் மற்றும் நற்சான்று வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் (பூம்புகார்) The Tamil Nadu Handicrafts Development Corporation Ltd., Chennai என்ற நிறுவனத்திற்கு தங்கப்பதக்கம் தயார் செய்து வழங்க ரூ. 51000/–ற்கான வரைவோலை வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகை ரூ. 51000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒட்டுநர்கள் திரு செ. மோகன் மற்றும் திரு ப. சீரங்கன் அவர்களுக்கு ‘‘தங்கப்பதக்கம்‘‘ வழங்க (பூம்புகார்) The Tamil Nadu Handicrafts Development Corporation Ltd., Chennai என்ற நிறுவனத்திற்கு வரைவோலை வழங்க பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(2964/21/சி1)**

**தீர்மானம் எண். 1060**

அனுமதிக்கப்பட்டது.

**(12)** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான குடிநீர் லாரி TN 28 BZ 9021–ற்கு புதிய டேங்கர் (6000 லி. கொள்ளளவு) வாங்கும் பணி மேற்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ.எண். | வாகன பராமரிப்பு நிறுவனங்களின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், பி.என்.ரோடு, திருப்பூர் | ரூ. 234230/– |
| 2 | ஸ்ரீ முருகன் ஆட்டோஸ், வைரபாளையம், ஈரோடு | 243670/– |
| 3 | காந்தி மோட்டார்ஸ், ஆர்.என். புதூர், ஈரோடு | 210630/– |

பெறப்பட்ட 3 விலைப்புள்ளிகளில் காந்தி மோட்டார்ஸ், ஈரோடு என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியினை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(2453/21/இ2)**

**தீர்மானம் எண். 1061**

அனுமதிக்கப்பட்டது.

**(13)** நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு 2021–22–ஆம் ஆண்டிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் நகர எல்லைக்குள் கோழிக்கடை மற்றும் மீன் கடைக்கு நகர் மன்றத் தீர்மானம் எண். 970 நாள் 26.02.2021–இன்படி திரு சி. சரவணக்குமார் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கியுள்ளது. குத்தகை உரிமத்தினை ஒப்படைப்பு செய்வதாக கடிதம் வழங்கியுள்ளார். வருவாய் ஆய்வரின் குறிப்பின்படி குத்தகை உரிமத்தினை தொடர்ந்து நடத்த இயலாததால் குத்தகை உரிமத்தினை ரத்து செய்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 1062**

அனுமதிக்கப்பட்டது.

**(14)** இராசிபுரம் நகராட்சி கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக செயல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் அறிவுரையின்பேரில்,

இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று காய்ச்சல் பரிசோதனை, ஆக்சிஜன் அளவு சரிபார்த்தல், கொரோனா காய்ச்சல் மருந்துகள் வழங்குவது போன்ற பணிகளுக்காக மொத்தம் 16451 வீடுகளுக்கு 100 வீட்டிற்கு தலா ஒரு DBC பணியாளர் வீதம் 160 நபர்களை ரூ. 160/– தினக்கூலி அடிப்படையில் மே, ஜுன், ஜுலை ஆகிய மூன்று மாதங்களுக்கு மகளிர் குழு மூலம் பணியமர்த்திக் கொள்ளவும் அதற்கான செலவினங்களை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை கோவிட் – 19 SDRF நிதியிலிருந்து Sec.15–இல் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணிகளை மகளிர் குழு மூலமாக பணியமர்த்த மன்றம் அனுமதிக்கலாம்.

(3072/21/எச்1)

**தீர்மானம் எண். 1063**

அனுமதிக்கப்பட்டது.

(15) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான உரக்கிடங்கில் மலைபோல் குவிந்துள்ள குப்பைகளை செயின்டோசர் மூலம் சமன் செய்ய, திருச்செங்கோடு, உதவி பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை அவர்களின் கடிதத்தின்படி ஒரு மணி நேரத்திற்கு வாடகைக் கட்டணம் ரூ. 840/– என்று தெரிவித்துள்ளார். அதன்படி, நகராட்சி உரக்கிடங்கில் உள்ள குப்பைகளை சமன் செய்ய ரூ. 840/– வீதம் 150 மணி நேரத்திற்கு இயங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 126000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) செயின்டோசர் இயக்க திருச்செங்கோடு, வேளாண்மை பொறியியல் துறைக்கு பணியாணை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(3212/19/எச்1)

**தீர்மானம் எண். 1064**

அனுமதிக்கப்பட்டது.

(16) இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் நகர்ப்புற ஏழை குடும்பங்களுக்கு புரட்சித் தலைவி அம்மா விபத்து மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் உள்ள படிவங்களை அச்சிடுதல், கள ஆய்வு மேற்கொள்ளுதல் மற்றும் கணினியில் பதிவேற்றம் செய்து கொடுக்கும் பணிக்கு 17.11.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | அச்சிடுதல் பணி படிவம் ஒன்றிற்கு | கள ஆய்வு செய்தல் பணி படிவம் ஒன்றிற்கு | கணினியில் பதிவேற்றம் செய்யும் பணி படிவம் ஒன்றிற்கு |
|---|---|---|---|---|
| 1 | Sri Saai Computer Works, 3/146, Big Bazaar Street, Rasipuram | ரூ. 7/– | ரூ. 7/– | ரூ. 7/– |
| 2 | Rasi Computer, 12/5, Attur Main Road, Rasipuram | ரூ. 6/– | ரூ. 6/– | ரூ. 6/– |
| 3 | Nanban Net Job Typing | ரூ. 5/– | ரூ. 5/– | ரூ. 5/– |

| | | | | |
|---|---|---|---|---|
| | Center & Print, 9, V.Nagar Road No. 19, Rasipuram | | | |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் Nanban Net Job Typing Center & Print, Rasipuram என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(251/19/எச்1)

**தீர்மானம் எண். 1065**

அனுமதிக்கப்பட்டது.

(17) இராசிபுரம் நகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் 2020–2021–ஆம் ஆண்டிற்கான பொது நிதிக் கணக்குகள், குடிநீர் நிதி கணக்குகள் மற்றும் கல்வி நிதி கணக்குகளை இணையத்தில் பதிவேற்றம் செய்து முடித்துக் கொடுக்கும் பணியினை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 50000/–த்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(1765/21/பி1)

**தீர்மானம் எண். 1066**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– ஆ.குணசீலன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (கூ.பொ),
இராசிபுரம் நகராட்சி.